# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 27 | 4 Pages | 28.08.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 27 | 4 பக்கங்கள் | 28.08.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கே.சி.ஆர். ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் பொதுக்கூட்டத்தில் சீறிய அமித்ஷா



தெலுங்கானா, ஆக. 28

தெலுங்கானா மாநிலத்தின் கம்மம் மாவட்டத்தில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா கலந்து கொண்டார். பொதுக்கூட்டத்தில் பேசிய அமித் ஷா, கே சந்திரசேகர ராவ் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார். மேலும் தெலுங்கானா மாநிலத்தில் கே சந்திரசேகர ராவ் அரசாங்கத்தை வெளியேற்றி, பா.ஜ.க. அங்கு ஆட்சியமைக்க வேண்டும் என்று அமித் ஷா வலியுறுத்தி இருக்கிறார். காங்கிரஸ் மற்றும் பி.ஆர்.எஸ். கட்சிகள் குடும்ப அரசியல் செய்து வருவதாக குற்றம்சாட்டிய அமித் ஷா, காங்கிரஸ் கட்சி சோனியா காந்தி குடும்பத்தையும், பி.ஆர்.எஸ். கட்சி கல்வகுன்ட்லா குடும்பத்திற்கும் சேவையாற்றி வருகின்றன. வரவிருக்கும் தேர்தலில் சந்திரசேகர ராவ் கட்சி தோல்வியை தழுவும். பா.ஜ.க. பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் என்று தெரிவித்தார். விரைவில் தெலுங்கானாவில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும். மக்கள் கே சந்திரசேகர ராவ் ஆட்சியின் மீது நம்பிக்கையை இழந்து வருகின்றனர். இதனால் அடுத்த தேர்தலில் அவர் தோல்வியை தழுவுவார் என்று அவர் மேலும் தெரிவித்தார். இதோடு காங்கிரஸ் மற்றும் பிரதமர் மோடியின் ஆட்சியை ஒப்பிட்டு, விவசாயிகளுக்கு அதிக நன்மை ஏற்படுத்தியது பா.ஜ.க. ஆட்சி தான் என்று பல்வேறு நலத்திட்டங்களை அமித் ஷா எடுத்துரைத்தார். இந்த பொதுக்கூட்டத்தில், மத்திய கலாசார மற்றும் சுற்றுலா துறை மந்திரி ஜி. கிஷன் ரெட்டி, பா.ஜ.க. தேசிய பொதுச் செயலாளர் பண்டி சஞ்சய் குமார், எம்.பி., பா.ஜ.க. ஓ.பி.சி. மோர்சா தேசிய தலைவர் டாக்டர் கே. லக்ஷமன், எம்.பி., டி.கே. அருணா, பா.ஜ.க. தேசிய துணை தலைவவர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முஸ்லீம் மாணவர் தாக்கப்பட்ட விவகாரம் பள்ளியை இழுத்து மூட அரசு உத்தரவு



உத்தரபிரதேசம், ஆக. 28

உத்தரபிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டம் ஹக்பர்பூர் கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் 2ம் வகுப்பு மாணவன் கணக்கு வாய்ப்பாடை மனப்பாடம் செய்து தவறாக கூறியதாலும், வீட்டுப் பாடத்தை எழுதாமல் வந்ததாலும் ஆசிரியை திருப்தி தியாகி சக மாணவர்களை அழைத்து மாணவன் கன்னத்தில் அறையும் படி கூறியுள்ளார். மேலும் மத ரீதியிலும் அந்த மாணவரை விமர்சித்ததாக கூறப்படுகிறது. இந்த நிகழ்வை மாணவனின் உறவினர் தனது செல்போனில் வீடியோவாக எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. வீட்டுப்பாடம் எழுதி வராத மாணவனை மதரீதியிலாக விமர்சித்து சக மாணவர்களை கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஆசிரியை திருப்தி தியாகி மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவனை தாக்கிய சம்பவம் தொடர்பாக சர்ச்சையில் சிக்கிய ஆசிரியை, "எனது தவறை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதற்காக நான் வெட்கப்பட மாட்டேன். அந்த மாணவனை மத ரீதியில் துன்புறுத்த வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. இந்த சம்பவம் தேவையில்லாமல் பெரிய பிரச்சினையாக மாற்றப்பட்டு இருக்கிறது," என்று தெரிவித்தார். இந்தநிலையில், மாணவன் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக பள்ளி மீது விசாரணை நடத்தப்பட இருக்கிறது. இதன் காரணமாக பள்ளியை தற்காலிகமாக மூடுவதற்கு அம்மாநில பள்ளிக்கல்வி துறை உத்தரவிட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பாக விளக்கம் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது. பள்ளி மூடப்படுவதை தொடர்ந்து, அப்பள்ளியில் பயின்று வரும் மாணவர்கள் வேறு பள்ளியில் அனுமதிக்கப்படுவார்கள் என்று பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

## நிலவின் வெப்பநிலையை தொடர்ந்து கண்காணிக்கும் விக்ரம் லேண்டர் இஸ்ரோ தகவல்

டெல்லி, ஆக. 28

விக்ரம் லேண்டரில் உள்ள 10 சென்சார் கருவிகள் மூலம் வெப்பநிலை ஆய்வு செய்யப்படுகிறது. நிலவின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலையை சந்திரயான் 3யின் விக்ரம் லேண்டர் ஆய்வு செய்கிறது.

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான் 3ன் விக்ரம் லேண்டர் கடந்த 23ம் தேதி வெற்றிகரமாக தரையிறங்கியது. இதையடுத்து, விக்ரம் லேண்டரில் இருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் அதன் ஆராய்ச்சி பணிகளை தொடங்கியுள்ளது. 14 நாட்களுக்கான ஆய்வு பணியை இஸ்ரோ ரோவருக்கு வழங்கியுள்ளது. அதன்படி, ரோவர் நிலவின் மண்ணில் நகர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இதற்கிடையே, விக்ரம் லேண்டர் தரையிறங்கும்போது எடுத்த புகைப்படம், இறங்கிய பிறகு எடுத்த புகைப்படம், ரோவர் வெளியேறும் வீடியோ உள்ளிட்டவைகளை இஸ்ரோ வெளியிட்டு வருகிறது. இந்நிலையில், நிலவின் வெப்பநிலையை விக்ரம் லேண்டர் தொடர்ந்து கண்காணித்து வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. விக்ரம் லேண்டரில் உள்ள 10 சென்சார் கருவிகள் மூலம் வெப்பநிலை ஆய்வு செய்யப்படுகிறது. நிலவின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலையை விக்ரம் லேண்டர் ஆய்வு செய்கிறது. விக்ரம் லேண்டரில் பொருத்தப்பட்ட கருவி CHASTE நிலவின் மேற்பரப்பில் வெப்பநிலையை அளவிட்ட, முதல் தகவலை இஸ்ரோ பதிவு செய்துள்ளது. நிலவின் மேற்பரப்பில் 10 சென்டி மீட்டர் வரை துளைக்கும் திறன் விக்ரம் லேண்டருக்கு உள்ளது.

# தேசிய நல்லாசிரியர் விருது வென்ற தமிழக ஆசிரியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஆக. 28

நாடு முழுக்க தேசிய நல்லாசிரியர் விருதுக்கு 50 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். தேசிய நல்லாசிரியர் விருது வென்ற இரண்டு தமிழக ஆசிரியர்களுக்கு கவர்னர் ஆர்.என். ரவி வாழ்த்து.

2023ம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 50 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து மதுரை அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் மற்றும் தென்காசி வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை மாலதி ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வாகி இருக்கும் இரண்டு ஆசிரியர்களுக்கும் பல்வேறு அரசியல்கட்சி தலைவர்கள் மற்றும் பலர் தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் இருந்து தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வாகியுள்ள மதுரை, அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் மற்றும் தென்காசி, வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை மாலதி ஆகிய இருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்!... pic.twitter.com/FNQ9NeqiF5 — M.K.Stalin (@mkstalin) August 27, 2023 இந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேசிய நல்லாசிரியர் விருது வென்ற இரண்டு தமிழக ஆசிரியர்களுக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்து இருக்கிறார். அதில், "மதுரை, அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் மற்றும் தென்காசி, வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை மாலதி ஆகிய இருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்! கல்வித்துறையில் தமிழ்நாடு செய்து வரும் சாதனைகளுக்கு ஆசிரியர்களே அடித்தளம்!," என்று குறிப்பிட்டுள்ளார்.



# தாராபுரம் அருகே வேன், கார்கள் மோதல்: தாய், மகன் பலி

தாராபுரம், ஆக.28

பலத்த காயமடைந்த சரவணன் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். பழனி கோவிலுக்கு சென்ற போது விபத்தில் தாய் மகன் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் படிக்க: ஈரோடு கருங்கல்பாளையத்தை சேர்ந்தவர் சரவணன் (வயது 27). இவர் இன்று காலை அவரது பெற்றோர் திருமூர்த்திதேவி மற்றும் சகோதரி சவுமியா ஆகியோருடன் பழனி கோவிலுக்கு காரில் புறப்பட்டு சென்றார். காரை சரவணன் ஓட்டினார். திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே மணக்கடவு பகுதியில் செல்லும் போது முன்னால் சென்ற காரை முந்த முயன்ற போது, எதிரே பழனி கோவிலுக்கு சென்றுவிட்டு, நாமக்கல் ராசிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த வேன் மீது மோதியதுடன், அந்த வழியாக சென்ற மற்றொரு கார் மீதும் மோதியது. இதில் சரவணன் மற்றும் அவரது பெற்றோர், சகோதரி காயமடைந்தனர். பலத்த காயமடைந்த சரவணன் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். விபத்தில் சிக்கிய மற்றொரு காரில் சென்ற காங்கயம் ஓலப்பாளையம் பகுதியை சேர்ந்த டிரைவர் ஆனந்தன், அபிராமி, அஜய்,ஹாசினி, லலிதா ஆகியோர் காயமடைந்தனர். இது குறித்த தகவல் அறிந்ததும் அலங்கியம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் காயமடைந்த 8பேரையும் மீட்டு சிகிச்சைக்காக தாராபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதில் மேல் சிகிச்சைக்காக சரவணனின் தாய் தேவி கோவை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். மற்றவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சரவணன் உடல் பிரேத பரிசோதனைக்காக தாராபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சுற்றுலா வேனில் வந்த பயணிகள் அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பினர். இந்த விபத்து காரணமாக தாராபுரம் மணக்கடவு சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போலீசார் விபத்துக்குள்ளான வாகனங்களை அகற்றி போக்குவரத்தை சரி செய்தனர். மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பழனி கோவிலுக்கு சென்ற போது விபத்தில் தாய்மகன் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# உடுமலை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

உடுமலை, ஆக. 28

சார்பு நீதிபதியுமான எம்.மணிகண்டன் தலைமை தாங்கி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். கல்லூரி மாணவமாணவிகள் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி வந்தார்கள்.

உடுமலை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் போதைப் பொருள் மற்றும் புகையிலை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியை உடுமலை வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும், சார்பு நீதிபதியுமான எம்.மணிகண்டன் தலைமை தாங்கி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட உரிமையியல் நீதிபதி பாலமுருகன், குற்றவியல் நீதித்துறை நடுவர் மீனாட்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரணி கச்சேரி வீதி, கல்பனா ரோடு வழியாக மத்திய பஸ் நிலையத்தில் முடிவடைந்தது. அப்போது கல்லூரி மாணவமாணவிகள் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், கோஷங்கள் எழுப்பியும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். இதில் வக்கீல் சங்க தலைவா் மனோகரன், செயலாளர் ராஜேந்திரன் மற்றும் வக்கீல்கள், போலீசார், கல்லூரி முதல்வர் ஜெயகுமார் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# உற்பத்தி அதிகரிப்பால் வெல்லம் விலை வீழ்ச்சி

பரமத்திவேலூர், ஆக. 28

கரும்புகளை வெட்டிச் செல்வதற்காக மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் பதிவு பதிவு செய்யாத விவசாயிகள் உள்ளூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் வெல்லம் தயாரிக்கும் ஆலை உரிமையாளர்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா அண்ணாநகர், நெட்டையாம்பாளையம், கொந்தளம், பொன்மலர்பாளையம், சேளூர், பிலிக்கல்பாளையம், சாணார்பாளையம், பிலிக்கல்பாளையம், குன்னத்தூர், வடகரை யாத்தூர், ஜேடர்பாளையம், கொத்தமங்கலம், சிறு நல்லிக்கோவில், ஜமீன் எளம்பிள்ளை, குரும்பல மகாதேவி ,சோழ சிராமணி, திடுமல், சின்னாம்பாளையம், சோழசிராமணி, அய்யம்பாளையம், கபி லர்மலை, பரமத்தி வேலூர், பாண்டமங்கலம், நன்செய் இடையாறு உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்க ணக்கான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விளையும் கரும்புகளை வெட்டிச் செல்வதற்காக மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு விவ சாயிகள் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யாத விவசாயிகள் உள்ளூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் வெல்லம் தயாரிக்கும் ஆலை உரிமையாளர்களுக்கு விற்பனை செய்கின்றனர். கரும்புகளை வாங்கிய ஆலை உரிமையாளர்கள் கரும்புகளை சாறு பிழிந்து பாகு ஆக்கி உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் மற்றும் நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை தயார் செய்கின்றனர். பின்னர் அவற்றை 30 கிலோ கொண்ட சிப்பங்களாககட்டி, பிலக்கல்பாளையத்தில் உள்ள வெல்ல ஏல சந்தைக்கு கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் புதன்கிழமைகளில் வெல்ல ஏலச் சந்தையில் ஏலம் நடைபெறுகிறது. வெல்லத்தை ஏலம் எடுப்பதற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்து வெல்லத்தை ஏலம் எடுத்துச் செல்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,300 வரையிலும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,300 வரையிலும் ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,230 வரையிலும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று1,230 வரையிலும் ஏலம் போனது. வெல்லம் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.



# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பசுமைக்குடில் அமைக்க மானியம்

கள்ளக்குறிச்சி, ஆக. 28

ஆண்டு முழுவதும் பயிர் சாகுபடிக்கு ஏற்றவாறு இருப்பதால், பருவத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை. நீர் ஆவியாதலை தடுத்து நீர்த் தேவையை குறைக்கவும் உதவும்.

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்ட செயலாக்கத்திற்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் இரிஷிவந்தியம் வட்டாரத்திற்கு எக்டர் மற்றும் நிதி இலக்கீடாக ரூ.115.7 லட்சம் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வெங்காய விதைகள், காய்கறி நாற்றுகள், பூக்கள் மற்றும் பழக்கன்றுகள் போன்றவை வழங்கப்படுவதுடன் மேலும், பல்வேறு கட்டமைப்புகள் ஏற்படுத்திட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பருவமில்லாத காலங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் பயிர் சாகுபடி மேற்கொண்டு வருமானத்தை பெருக்கிட பாதுகாக்கப்பட்ட சூழலில் தக்காளி, வெள்ளரி, குடைமிளகாய் போன்ற காய்கறி



பயிர்களை பயிர் செய்திட பசுமைக்குடில் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட உள்ளது. பசுமைக்குடில் என்பது ஒளி ஊடுருவக்கூடிய பொருட்களால் கட்டமைக்கப்பட்ட கண்ணாடி வீடு போன்ற அமைப்பாகும். அங்கு தாவரங்கள் வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வளர்கின்றன.

ஆண்டு முழுவதும் பயிர் சாகுபடிக்கு ஏற்றவாறு இருப்பதால், பருவத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை. மேலும், சந்தை ஏற்ற இறக்கங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு சரியானமுறையில்திட்டமிடுதலின் மூலம் உரிய நேரத்தில் தோட்டக்கலைப் பயிர்களான காய்கறி மற்றும்பூக்கள்போன்றபயிர்களை சாகுபடி செய்து விளை பொருட்களுக்கு கூடுதல்லாபம்ஈட்டலாம். பாதுகாக்கப்பட்ட சூழலில் விளைவிக்கப்படுவதால் விளைபொருட்கள் கூடுதல் தரத்துடனும், நோய் மற்றும் பூச்சித் தாக்குதல் இன்றி காணப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் மற்றும் நீரில் கரையும் உரங்களைப் பயன்படுத்தி மகசூலைஅதிகரிக்கலாம். நிலப்போர்வை பயன்படுத் தப்படுவதால் களைகளைக் கட்டுக்குள் வைப்பதுடன், நீர் ஆவியாதலை தடுத்து நீர்த்தேவையை குறைக்கவும் உதவும். ஒருங்கிணைந்த சாகுபடி முறைகளை கடைபிடிப்பதால் மகசூல் 5 முதல் 10% அதிகரிக்கும். இத்திட்டத்தில் 1000 ச.மீ. அளவுள்ள பசுமைக்குடில் அமைத்திட 50% மானியத்தில் அதிகபட்சமாக ரூ.4,67,500 வழங்கப்படும். பயன் பெற விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களது நிலத்திற்கான சிட்டா, அடங்கல், நில வரைபடம், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், பாஸ்போட் அளவு புகைப்படம் 2, வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் ரிஷிவந்தியம் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகம் மூலமாகவோ அல்லது விவசாயிகள் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பயன் பெறுமாறு ரிஷிவந்தியம் தோட்டக்கலை உதவி இயக்குனர்முருகன்வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# உடல்நிலை சரியில்லை; பணம் அனுப்பி வைங்க..நூதன முறையில் பொதுமக்களிடம் பணமோசடியில் ஈடுபடும் கும்பல்

திருப்பூர், ஆக. 28

நான் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் உள்ளேன். மறுநாள் நலம் விசாரிக்க நண்பரை அழைத்தபோதுதான் மோசடி என்பது தெரிந்தது.

நண்பர்கள் போல எஸ்.எம்.எஸ்.., அனுப்பி மருத்துவ தேவைக்கு பணம் தேவைப்படுவதாக மோசடி செய்வது அதிகரித்துள்ளது.இது சம்பந்தமாக சைபர் கிரைம் போலீசில் ஏராளமான புகார்கள் வந்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

இது குறித்து சைபர் கிரைம் போலீசார் கூறியதாவது: மோசடி கும்பலை சேர்ந்தவர்கள் நண்பர் போல மொபைல் போனில், நான் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் உள்ளேன். செலவுக்கு அவசரமாக பணம் தேவைப்படுகிறது' என்று கூறி ரூ.5ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை அனுப்பி வைக்க கோரி மோசடி செய்து வருகின்றனர்.

இதனை மோசடி நபர்கள் இரவு 10 மணிக்கு மேல் வாட்ஸ் ஆப்பில் மெசேஜ் ஆக அனுப்புகின்றனர். சில நாட்களுக்கு முன்ஒருவரிடம்பணத்தை மோசடி செய்து உள்ளனர். அவரின் நண்பர் லண்டனில் உள்ளார்.

அந்த வெளிநாட்டு நண்பரின் வாட்ஸ் ஆப், டி.பி., படத்தை வைத்து அவரின் செல்போன் எண்ணுக்கு ரூ.1 லட்சம் கேட்டு மெசேஜ் வந்துள்ளது.அவரது நண்பர் ஏற்கனவே அவரிடம் தனக்கு உடல்நலக்குறைவு என்று கூறியிருந்ததால், அதை உண்மை என்று நம்பி ரூ.1 லட்சம் அனுப்பி வைத்தார். மறுநாள் நலம் விசாரிக்க நண்பரைஅழைத்தபோதுதான் மோசடி என்பது தெரிந்தது.அவர்அளித்த புகாரின் படி, விசாரித்து வருகிறோம். எனவே இதுபோன்று மெசேஜ் வந்தால் பொதுமக்கள் நம்ப வேண்டாம்.சம்பந்தப்பட்டவரைதொடர்புகொண்டு உண்மை தன்மை அறிந்து உதவ வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# கால்நடைகளுக்கு அம்மை தடுப்பூசி தவறாமல் செலுத்த வேண்டுகோள்

உடுமலை, ஆக. 28

மாடுகளுக்கு அம்மை நோய் பரவாமல் தடுக்க தடுப்பூசி போடப்படுகிறது. 21 நாட்களுக்கு பின் கால்நடைகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

உடுமலை, பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில் விவசாயத்துக்கு அடுத்ததாக கால்நடை வளர்ப்பு உள்ளது. அதில், தற்போது மாடுகளுக்கு அம்மை நோய் பரவாமல் தடுக்க தடுப்பூசி போடப்படுகிறது.

இது குறித்து கால்நடைத் துறையினர் கூறுகையில், வட மாநிலங்களான ராஜஸ்தான், குஜராத்தில் கால்நடைகளுக்கு தோல் கழலை நோய் பரவி, அதிகளவு இறப்பு ஏற்பட்டுள்ளது. உன்னி மற்றும் கொசுக்களால் இந்த வைரஸ் பரவுகிறது. நோய் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு காய்ச்சல், தீவனம் உண்ணாமை, தோல் தடிப்பு ஆகிய அறிகுறிகள் தென்படும்.

சிறு கன்றுகள் முதல் கறவை மாடுகள் வரை பாதிக்கிறது. அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கால்நடை டாக்டரை அணுகி சிகிச்சை பெற வேண்டும். பண்ணைகளைசுற்றிலும் நீர்தேங்காமல் பராமரிக்க வேண்டும். கழிவுகளை அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும். அரசு வழங்கும் இலவச தடுப்பூசி போட்டுக்கொண்டால் இந்த நோய் வராமல் தடுக்கலாம்.

21 நாட்களுக்கு பின், கால்நடைகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.கால்நடைகளுக்கு தடுப்பூசியை போட்டுக் கொள்ள, கால்நடை வளர்ப்போர் முன்வர வேண்டும் என்றனர்.

# கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு பட்டதாரி பெண் இரு சக்கர வாகன பயணம்

கன்னியாகுமரி, ஆக. 28

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை இருசக்கர வாகன பயணம் நடத்த முடிவு பல்வேறு மாநிலங்கள் வழியாக அடுத்த மாதம் (செப்டம்பர்) 5ந்தேதி காஷ்மீர் சென்றடைகிறார்.

கர்நாடக மாநிலம் ராம்நகர் மாவட்டம் கிருஷ்ணாபுரதொட்டி பகுதியை சேர்ந்தவர் சித்ரா ராவ் (வயது 24). இவர் நடன கலைஞர் ஆவார். எம்.பி.ஏ.பெண் பட்டதாரியான இவர் பெற்றோர்களை கைவிடக்கூடாது பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்க்கக்கூடாது என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை இருசக்கர வாகன



பயணம் நடத்த முடிவு செய்து இருந்தார். அதன்படி அவரது இருசக்கர வாகன பயணத்தின் தொடக்க நிகழ்ச்சி கன்னியாகுமரி காந்தி மண்டபம் முன்பு நேற்று மாலை நடந்தது. இந்த நிகழ்ச்சியில் குமரி மாவட்ட தீயணைப்பு அதிகாரி சத்தியகுமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் குமரி மாவட்ட நேருயுவ கேந்திரா கணக்கு மற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர் ரெங்கநாதன், மாவட்ட இளைஞர் நல அலுவலர் ஞானச்சந்திரன், மாவட்ட உதவி தீயணைப்பு அலுவலர் துரை உள்பட பலர் கலந்துகொண்டனர். கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு இருசக்கர வாகன பயணம் மேற்கொண்ட சித்ராராவ் கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு செல்லும் போது அவரது தாயாரான கவிதா, அவரை கட்டித்தழுவி வழி அனுப்பி வைத்தார். இவர் பல்வேறு மாநிலங்கள் வழியாக அடுத்த மாதம் (செப்டம்பர்) 5ந்தேதி காஷ்மீர் சென்றடைகிறார். மொத்தம் உள்ள 3 ஆயிரத்து 590 கிலோமீட்டர் தூரத்தை 10 நாட்களில் கடந்து செல்கிறார். அதன்பிறகு மீண்டும் காஷ்மீரில் இருந்து இருசக்கரவாகனத்தில் புறப்பட்டு பல்வேறு மாநிலங்கள் வழியாக 3 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தை 10 நாட்களில் கடந்து பெங்களூரில் தனது இருசக்கர வாகன பயணத்தை நிறைவு செய்கிறார்.

# நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க கோரி விவசாயிகள் சாலை மறியல்

உத்திரமேரூர், ஆக. 28

நெல் கொள்முதல் நிலையத்தினை திறக்க வலியுறுத்தி சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சாலைமறியல் போராட்டத்தில் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

உத்திரமேரூர் அடுத்த ஆலஞ்சேரி கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைந்துள்ளது. இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் ஆலஞ்சேரி, தோட்டநாவல், ரெட்டமங்கலம், மலைக்காலனி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட நெல் பயிரினை விற்பனை செய்து வருகின்றனர். தற்போது நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என நம்பிக்கையுடன் விவசாயிகள் ஆலஞ்சேரி கிராமத்தில் தங்களது நெல் பயிரினை கொட்டி வைத்து அரசு நெல் கொள்முதல் நிலையத்திற்காக காத்திருந்தனர். ஒரு மாதத்திற்கு மேலாகியும் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாததால் ஆத்திரமடைந்த விவசாயிகள் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை திறக்க வலியுறுத்தி ஆலஞ்சேரி நெல்வாய் கூட்ரோடு சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த உத்திரமேரூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் விநாயகம் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர். சாலைமறியல் போராட்டத்தில் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# பீஸ் ரேட் அடிப்படையில் கட்டணம் எம்ப்ராய்டரி அசோசியேஷன் முடிவு

திருப்பூர், ஆக. 28

ஒவ்வொரு நிதியாண்டிலும் மூலப் பொருட்கள், தொழிலாளர் சம்பளம், மின்கட்டணம் போன்றவை உயர்ந்து கொண்டே இருக்கின்றது. கடந்த 2 ஆண்டுகளில் 150க்கும் மேற்பட்ட எம்ப்ராய்டரி நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன.

திருப்பூர் கம்ப்யூட்டர் எம்ப்ராய்டரி அசோசியேஷன் சார்பில் தொழில் சிக்கல்களும், தீர்வுகளும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சி தெற்கு ரோட்டரி ஹாலில் நடந்தது. எம்ப்ராய்டரி அசோசியேஷன் தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க துணை செயலாளர் குமார் துரைசாமி பேசுகையில், எம்ப்ராய்டரி நிறுவனங்களின் பிரச்னைகளை கவனத்தில் கொள்வோம். விரைவில் நெருக்கடிகளிலிருந்து மீள்வோம் என்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற தொழில்துறை ஆலோசகர் ராஜா ராமசுந்தரம் பேசினார். தொடர்ந்து, எம்ப்ராய்டரி நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் நிர்வாகிகள் பேசியதாவது: ஒவ்வொரு நிதியாண்டிலும் மூலப்பொருட்கள், தொழிலாளர் சம்பளம், மின்கட்டணம் போன்றவை உயர்ந்து கொண்டே இருக்கின்ற போதும் கடந்த 15 ஆண்டுகளாக எம்ப்ராய்டரி கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. போதுமான ஆர்டர்கள் இல்லாதது, தொழிலாளர் பற்றாக்குறை, போதுமான எம்ப்ராய்டரி கட்டணங்கள் கிடைக்க பெறாதது போன்ற காரணங்களால் கடந்த 2 ஆண்டுகளில் 150க்கும் மேற்பட்ட எம்ப்ராய்டரி நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. இனிவரும் காலங்களில் எம்ப்ராய்டரி கட்டணத்தை பீஸ் ரேட் அடிப்படையில் மட்டுமே முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

# தொப்பூர் கணவாய் அருகே ராட்சத இரும்பு உருளை ஏற்றி வந்த லாரி கவிழ்ந்து விபத்து

தொப்பூர், ஆக. 28

மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து தூத்துக்குடிக்கு ராட்சத இரும்பு உருளையை ஏற்றி சென்று லாரி தருமபுரி மாவட்டம், பெங்களூரு சேலம் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் கணவாய் பகுதியில் இன்று காலை வந்து கொண்டிருந்தது.அப்போதுடிரைவரின் கட்டுபாட்டை இழந்து லாரி தலைகுப்புற கவிழ்ந்ததில் ராட்சத உருளையும் சாலை ஓரம் கவிழ்ந்தது. இதை தொடர்ந்து இந்த வாகனத்தின் பின்னால் வந்த கண்டெய்னர் லாரியும் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ராட்சத இரும்பு உருளையை ஏற்றி வந்த லாரியின் ஓட்டுனர் படுகாயம் அடைந்தார். வாகன இடிபாடுகளில் சிக்கியவரை மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்தவிபத்தால் பெங்களூர்சேலம் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு மணி நேரமாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து தகவல் அறிந்து வந்த தொப்பூர் போலீசார் மற்றும் சாலை பராமரிப்பு குழுவினர் விபத்துக்குள்ளான வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

# ஓணம் பண்டிகையை முன்னிட்டு திருப்பூர் வழியாக சிறப்பு ரெயில்கள் இயக்கம்

திருப்பூர், ஆக. 28

செகந்திராபாத் கொல்லம் சிறப்பு ரெயில் (எண்: 07119) இயக்கப்படுகிறது. தாம்பரம் மங்களூரு ரெயில் (எண்: 06049) 2ந் தேதி இயக்கப்படுகிறது.

வருகிற 29ந் தேதி ஓணம் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி செகந்திராபாத் கொல்லம் சிறப்பு ரெயில் (எண்: 07119) இயக்கப்படுகிறது.

நேற்று 27ந்தேதி கொல்லத்தில் இருந்து இரவு 7 மணிக்கு புறப்படும் ரெயில் (எண்: 07120) மறுநாள் இரவு 11:50 மணிக்கு செகந்திரபாத் சென்றடையும். திருப்பூருக்கு அதிகாலை 3:15 மணிக்கு வரும். தாம்பரம் மங்களூரு ரெயில் (எண்:06049) 2ந் தேதி இயக்கப்படுகிறது.

மதியம் 3:30 மணிக்கு புறப்படும் ரெயில் மறுநாள் காலை 9:30 மணிக்கு மங்களூரு சென்று சேரும். திருப்பூரை இரவு 11:28 மணிக்கு கடந்து செல்லும்.மறுமார்க்கமாக மங்களூரு தாம்பரம் ரெயில் (எண்: 06050) 3ந் தேதி இயங்கும்.இரவு 11 மணிக்கு புறப்படும் ரெயில் மறுநாள் மதியம் 3:15 மணிக்கு தாம்பரம் சென்றுசேரும்.திருப்பூரில் இந்த ரெயில் காலை 7:13 மணிக்கு நின்று செல்லும் என அறிவிக்கபட்டுள்ளது.

# மீன்கள் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்தது

ஈரோடு, ஆக. 28

ஈரோடு ஸ்டோனி பிரிட்ஜ் மீன் மார்க்கெட்டில் 30க்கும் மேற்பட்ட மீன் கடைகள் உள்ளன. இங்கு கடல் மீன்கள் விற்கப்படுகின்றன. தூத்துக்குடி, நாகப்பட்டினம், காரைக்கால், கேரளா, ராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் இருந்து கடல் மீன்கள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்க சாதாரண நாட்களைவிட வார இறுதி நாட்களில் வியாபாரம் அதிக அளவில் நடைபெற்று வரும். ஏனெனில் ஆடி மாதம் காரணமாக கடந்த சில வாரமாக மீன்கள் விற்பனை மந்த நிலையில் இருந்தது. ஆனால் இன்று மீன்கள் வரத்து அதிகரித்து விலையும் குறைந்ததால் வியா பாரம் கடந்த வாரத்தை விட விறு விறுப்பாக நடைபெற்றது. இன்று மீன் மார்க்கெட்டிற்கு 16 டன் மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. மீன் வரத்து அதிகரித்து காணப்பட்டதால் கடந்த வாரத்தை விட இன்று மீன்கள் கிலோ ரூ.50 முதல் ரூ.150 வரை



விலை குறைந்து காணப்பட்டது. ரூ.1,200க்கு விற்கப்பட்ட வஞ்சரம் இன்று கிலோவுக்கு 400 ரூபாய் குறைந்து ரூ.800க்கு விற்கப்பட்டது. இதேபோல் 550 ரூபாய்க்கு விற்கப்பட்ட விளாமீன் 450க்கும், 500 ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய் பாறை 450க்கும், 450க்கு விற்கப்பட்ட சீலா 350 க்கும், 650க்கு விற்கப்பட்ட நண்டு 500 ரூபாய்க்கும், 450க்கு விற்கப்பட்ட பொட்டு நண்டு 350க்கும், 350க்கு விற்கப்பட்ட அயிலை 300 ரூபாய்க்கும், 700 ரூபாய்க்கு விற்கப்பட்ட இறால் 650க்கும், 800 ரூபாய்க்கு விற்கப்பட்ட வெள்ளை வாவல் 600 ரூபாய்க்கும், 650க்கு விற்கப்பட்ட கருப்பு வாவல் 500 ரூபாய்க்கும், 700 ரூபாய்க்கு விற்கப்பட்ட மயில் மீன் 600 ரூபாய்க்கும், 600க்கு விற்கப்பட்ட கிளி மீன் 500 க்கும், 350க்கு விற்கப்பட்ட நெத்திலி 250க்கும் விற்கப்பட்டது. இதேபோல் மற்ற மீன்களின் விலை கிலோவில் வருமாறு:கேரளா மத்தி 250, சின்ன இறால்500, திருக்கை 300, சூரி 300 க்கும் விற்கப்பட்டது. அதே நேரத்தில் போன வாரம் 250 ரூபாய்க்கு விற்கப்பட்ட கடுவா இந்த வாரம் 100 ரூபாய் அதிகரித்து 350க்கு விற்கப்பட்டது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# எம்.ஜி.ஆர் மார்க்கெட்டில் கட்டுமான பணிகளை மேயர் ஆய்வு

ஓசூர், ஆக. 28

ரூ.5 கோடியே 88 லட்சம் மதிப்பில் வரும் புதிய வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட, எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.5 கோடியே 88 லட்சம் மதிப்பில் வரும் புதிய



வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமான பணிகளை, மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, மாநகராட்சி ஆணையாளர் சினேகா, துணை மேயர் ஆனந்தய்யா, மாநகராட்சி செயற்பொறியாளர் ராஜாராம், உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் உடன் இருந்தனர்.

# சதுரகிரி கோவிலுக்கு செல்ல 4 நாட்கள் பக்தர்களுக்கு அனுமதி

திருமங்கலம், ஆக. 28

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள சதுரகிரி சந்தன மகாலிங்கம்சுந்தர மகாலிங்கம் கோவில் பிரசித்தி பெற்றதாகும். இந்த கோவில் அடர் வனப்பகுதியில் உள்ளது. இதனால் அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷ நாட்கள் வரும் போது சுந்தர மகாலிங்க சுவாமியை தரிசிக்க பக்தர்களுக்கு வனத்துறையினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளித்து வருகின்றனர். இந்த நிலையில் நாளை 28ந்தேதி பிரதோஷம் வருவதை முன்னிட்டு 4 நாட்கள் பக்தர்கள் தாணிப்பாறை கேட்டில் இருந்து மலையேறி சென்று தரிசிக்க வனத்துறை அனுமதி அளித்துள்ளது. காலை 7 மணி முதல் 12 மணி வரை மட்டுமே பயணிகள் மலையேறிச் செல்ல அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் எளிதில் தீப்பற்றக்கூடிய மற்றும் கத்தி போன்ற ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி இல்லை. மழை பெய்தாலோ, காட்டுத் தீ ஏற்பட்டாலோ பக்தர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்படும் என வனத்துறை தெரிவித்துள்ளது.

# கோவையில் பூக்கள் விலை கிடுகிடு உயர்வு



கோவை, ஆக. 28

ஓணம் பண்டிகையை முன்னிட்டு கோவையில் வசிக்கும் மலையாளிகள் அத்தப்பூ கோலமிட்டு வழிபாடு நடத்தி வருகின்றனர் கோவையில் மல்லி ரூ . 8 0 0 க் கு விற்பனையாகிறது.

கோவை மாவட்டத்தில் பூ மார்க்கெட், மேட்டுப்பா–ளையம், வால்பாறை, தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மலர்ச் சந்தைகள் இயங்கி வருகின்றன. இங்கு உள்ளூர் விவசாயிகள் சாகுபடி செய்த பூக்களை விற்பனைக்கு கொர்ண்டு வருகின்றனர். மேலும் வெளி யூ ர் மாநிலம் மார்க்கெட்டுகளில் இருந்து பூக்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு கோவை மாவட்டத்தில் வசிக்கும் மலையாளிகள் அத்தப்பூ கோலமிட்டு வழிபாடு நடத்தி வருகின்றனர். மேலும் கல்லூரிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளிட்ட பல்வேறு ப கு தி க ளி லு ம் பூக்கோலத்தை பார்க்க முடிகிறது. கோவை மற்றும் பல்வேறு பகுதிகளில் தற்போது வறண்ட வானிலை நிலவுகிறது. போதியஅளவில் மழை இல்லை. எனவே அங்கு பூக்களின் விளைச்சல் குறைந்துஉள்ளது.மேலும் கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில்இருந்துடன்கணக்கில் பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எனவே கோவைக்கு மலர் வரத்து குறைந்து உள்ளது. இதன்காரணமாககோவை பூமார்க்கெட்டில்பூக்களின் விலை கிடுகிடுவென அதிகரித்து வருகிறது. அங்கு தற்போது ஒரு கிலோ மல்லி ரூ.800க்கு விற்கப்படுகிறது. அதேபோல ஜாதி மல்லி ரூ.400க்கு விற்பனை–யாகிறது. இருந்த போதிலும் ஓணம் பண்டிகை என்பதால் பொதுமக்கள் விலைஉயர்வு பற்றி கவலைப்படாமல் பூக்களை கிலோக்கணக்கில் வாங்கி செல்கின்றனர். கோவை பூ மார்க்கெட்டில் விற்பனை–யாகும் பூக்களின் விவரம் (கிலோவுக்கு): செவ்வந்தி160, செண்டு மல்லி50, சம்பங்கி120, அரளி120, ஒரு கட்டு மருகு10, வாடாமல்லி80, ரோஜா240, மரிக்கொழுந்து30, துளசி40, கலர் செவ்வந்தி240, வெள்ளை செவ்வந்தி200, மஞ்சள் செவ்வந்தி100, ஜாதிப்பூ 400, கோழிக் கொண்டை100, ஒரு தாமரைப்பூ20, முல்லை400.

இதுகுறித்து பூ வி யா பா ரி க ள் கூறுகையில், கோவை மலர்ச்சந்தைக்கு பூக்களின் வரத்து போதிய அளவில் இல்லை. உற்பத்தியும் சற்று குறைந்து உள்ளது. ஓணம் பண்டிகைக்காக பெருமளவில் பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எனவே கோவை மார்க்கெட்டுகளில் பூக்களின் விலை உயர்ந்து உள்ளது. கேரளாவில் ஓணம் பண்டிகை முடிந்தபிறகு கோவை மார்க்கெட்டுகளில் பூக்களின் விலை குறைய வாய்ப்பு உண்டு என்று தெரிவித்து உள்ளனர்.

# தேசிய நல்லாசிரியர் விருது தேர்வான தமிழக ஆசிரியர்கள் கவர்னர் ஆர்.என். ரவி வாழ்த்து




சென்னை, ஆக. 28

தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 50 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழக கவர்னர் தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2023ம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 50 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.தமிழ்நாட்டில்இருந்து 2 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மதுரை அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் மற்றும் தென்காசி வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை மாலதி ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழக கவர்னர் ஆர் என் ரவி தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் (முன்பு டுவிட்டர்) ப தி வி ல் கூறியிருப்பதாவது:"கல்வி துறையில் உங்களின்தலை சிறந்த முயற்சிகள் மற்றும் அர்பணிப்புக்காக, தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகி இருக்கும் தமிழகத்தை சேர்ந்த ஆசிரியை மாலதி, ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்," என்று தெரிவித்துள்ளார்.

# மின்கம்பத்தில் தாழ்வாக உள்ள மின்கம்பிகளை உயர்த்தி அமைக்க கோரிக்கை



ஒகேனக்கல், ஆக. 28

ஊட்டமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மின் கம்பிகள்தாழ்வாகஅமைக்கப் பட்டுள்ளது. மின் வாரிய துறையினர் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை உயர்த்தி அமைக்கப் பட வேண்டும்.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா தலத்திற்கு தினம்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வேன், கார், பஸ் இதுபோன்ற வாகனங்களில் அதிக அளவில் வருகின்றனர்.

இதனால் எப்போதும் ஒகேனக்கல் பரபரப்பாக காணப்படும். இது மட்டும் இல்லாமல் ஒகேனக்கல்லில் இருந்து அஞ்செட்டி வழியாக ஓசூர், பெங்களூர் செல்லக்கூடிய சாலையில் ஏராளமான வாகனங்கள் வருகின்றன.

குறிப்பாக ஒகேனக்கல், ஊட்டமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மின் கம்பிகள்தாழ்வாகஅமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வழியாக செல்லக்கூடிய சரக்கு வாகனங்கள், பேருந்து, வைக்கோல் ஏற்றி செல்ல கூடிய லாரிகள் உரசும் அளவிற்கு இந்த மின் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது. பெரும் விபத்து ஏற்படுவதற்கு முன்பே விபத்தை தடுக்கும் வகையில் மின் வாரிய துறையினர் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை உயர்த்தி அமைக்கப் பட வேண்டும்.

மேலும் இரவு நேரங்களில் மின்வெட்டு அதிக அளவில் தினந்தோறும் ஏற்படுகிறது. இரவு நேரங்களில் மின் ஊழியர்கள் இருப்பதில்லை. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரவு நேரங்களிலும் ஊழியர்கள் பணியில் இருக்க வேண்டும் என பொதுமக்களும், வாகன ஓட்டிகள் கோ ரி க் கை விடுத்துள்ளனர்.

# திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோவிலில் திருவாசகம் முற்றோதல் விழா:ஆயிரக்கணக்கானோர் குவிந்தனர்




கடலூர், ஆக. 28

அடியார்கள், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். பண்ருட்டி யூனியன் அலுவலகம் அருகில் இருந்து திருமுறை ஊர்வலம் நடைபெற்றது.

திருவாசகம் என்பது தமிழில் பாடப் பெற்ற ஒரு பக்தி நூலாகும். இறைவன் மீதான துதிப்பாடல்களை சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான மாணிக்க வாசகர்உலகத்தில்வாழும் அனைத்து உயிர்களுக்காகவும் இறைவனிடம் அழுதும், தொழுதும் பாடியதாகும். இந்த திருவாசகத்தை திருவாசக சித்தர் திருக்கழுகுன்றம் தாமோதரன் உலகம் முழுவதிலும் உள்ள சிவன் கோவிலுக்கு குழுவினரோடு சென்று முற்றோதல் நிகழ்த்தி வருகிறார் கடலூர் மாவட்டம், பண்ருட்டி திருவதிகை வீரட்டானேஸ்வரர்கோவிலில் திருவாசகம் முற்றோதல் திருவிழா இன்று காலை 8 மணிக்கு தொடங்கியது. இதில் திருவாசக சித்தர் திருக்கழு குன்றம் தாமோதரன் கலந்து கொண்டு பக்தர்களுக்கு அருளாசி வழங்கி பண்ணிசையுடன் திருவாசகப் பாடல்களை பாடினார். விழாவிற்கு வர்த்தக சங்கத் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். வர்த்தக சங்க மாவட்ட செயலாளர் வீரப்பன் முன்னிலை வைத்தார். விழாவில் பண்ருட்டி எம்.எல்.ஏ., வேல் முருகன், பண்ருட்டி நகர மன்ற தலைவர் ராஜேந்திரன், துணைத்தலைவர் சிவா, முன்னாள் அமைச்சர் எம்.சி. தாமோதரன், நகைக்கடை அதிபர் வைரக்கண்ணு, எஸ்.பி அருள், தட்சணா கேஸ் அதிபர் வக்கீல் தட்சிணா மூர்த்தி, வக்கீல் தமிழரசன், அகில இந்திய முந்திரி சங்க தேசிய செயலாளர் ராமகிருஷ்ணன், பிரதிபா கேஷ்யூஸ். அதிபர் மாயகிருஷ்ணன், தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்க மாநில தலைவர் கே.என்.சி. மோகன், வானவில் ராஜா மற்றும் அடியார்கள், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவை முன்னிட்டு திருவதிகை வீரட்டா னேஸ்வரர்கோவில்விழாக்கோலம் பூண்டுள்ளது. முன்னதாக பண்ருட்டி யூனியன் அலுவலகம் அருகில் இருந்து திருமுறை ஊர்வலம் நடைபெற்றது.

# பலியான 9 பேரும் அடையாளம் தெரிந்தது சென்னையில் இருந்து 2 விமானங்களில் சொந்த ஊருக்கு உடல்கள் அனுப்பி வைப்பு



செங்கல்பட்டு, ஆக. 28

உத்தர பிரதேசம் மாநிலம் லக்னோவில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு ஆன்மீக சுற்றுலா சென்றுவிட்டு, நேற்று ராமேசுவரம் செல்வதற்காக 63 பயணிகள் ரெயிலில் வந்தனர். இந்த ரெயில் பெட்டியில் நேற்று அதிகாலை டீ தயாரிப்பதற்காக சிலிண்டரை பற்ற வைத்தபோது பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 9 பேர் உடல் கருகி பலியானார்கள். நெஞ்சை பதற வைக்கும் இந்த சம்பவத்தில் ஒருவரின் உடல் அடையாளம் காண முடியாத அளவுக்கு காணப்பட்டது. கடைசியில் அவர் பெண் என்பது உறுதியானது.

எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை ரெயிலில் எடுத்துச் செல்லக்கூடாது என்ற விதிகள் இருந்தும் அதனை மீறி யாத்ரீகர்கள் கொண்டு வந்த சிலிண்டர் அவர்கள் உயிரை பறித்துள்ளது. 63 பேர் பயணித்த அந்த ரெயில் பெட்டியில் சமையல் செய்தவற்காக 5 பேர் வந்துள்ளனர். அவர்கள் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான உணவுகளை தயாரித்து கொடுத்துள்ளனர். அதேபோல் கியாஸ் அடுப்பை பயன்படுத்தாமல், சிலிண்டரிலேயே வைத்து சமையல் செய்துள்ளனர். அப்போதுதான் விபத்து ஏற்பட்டுள்ளது. தீயணைப்பு படையினர் மற்றும் மீட்புக்குழுவினர் தீயை அணைத்த பின்னர் உள்ளே சென்று பார்த்த போது, ஆங்காங்கே உடல்கள் கருகிய நிலையில் கிடந்தன. ஒரு சிலர் தாங்கள் படுத்திருந்த பெர்த் படுக்கையிலேயே பிணமாக கரிக்கட்டையாக கிடந்தனர். அப்பர் பெர்த், லோயர் பெர்த்தில் படுத்திருந்தவர்களின் பெயர்களை வைத்தே அடையாளம் காணப்பட்டது. லேசான காயம் அடைந்தவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களைஅழைத்துக்கொண்டு அரசு மருத்துவமனைக்கு சென்ற போலீசார், அவர்கள் மூலம் இறந்தவர்களை அடையாளம் கண்டனர். அதன்படி பலியானவர்களின் விபரம் வருமாறு: 1.ஹரிஷ்குமார் யாசின் (வயது 62), பிரேம் நகர், சிட்டாப்பூர். 2.தீபக் கஸ்யாப் (21), நயபாஷி, கவுசல்யா பவன், சிட்டாப்பூர். 3.அன்குல் (36),

சாய்பாபா ரோடு, சிட்டாப்பூர். 4.சத்ரு தமன் சிங் (65), மவுலா அதஸ் நகர், சி ட் டா ப் பூ ர் . 5.பரமேஸ்வர் தயாள் சர்மா (57), மீடா டாக்கீஸ் கிராமம், ஹர்தோஸ் மாவட்டம். 6.மித்திலேஸ் (62), ஆதர்ஸ் நகர், செக்டார்1, நைபாலபூர், லக்கிம்பூர்ரோடு,சிட்டாப்பூர். 7.சாந்திதேவி வர்மா (70), கோட்டியா, லக்கிம்பூர். 8.குமார்ஹிமானிபன்சால் (27), அக்ரசன் கண்டன் கல்லூரி அருகில், சவுக், லக்னோ. 9.மனோரமா அகல்வால் (81), அக்ரசன் ஆண்டன் கல்லூரி அருகில், சவுக், லக்னோ. இவர்கள் 9 பேரின் உடல்களும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து முடிக்கப்பட்டது. பின்னர் அவர்களது உடல்களுக்கு அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், கலெக்டர் சங்கீதா மற்றும் அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து 3 ஆம்புலன்ஸ் வேன்கள் மூலம் பலியானோரின் உடல்கள் சென்னை விமான நிலையம் கொண்டு செல்லட்டது.

அங்கிருந்து 2 தனி விமானங்களில் உடல்கள் உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ கொண்டு செல்லப்பட்டது. ஆன்மீக சுற்றுலா சென்றவர்கள் தீயில் கருகி பலியாகி உடல்களாக கொண்டு வரப்பட்டது அவர்களின் உறவினர்களிடையேயும், அவர்கள் வசித்த பகுதியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

# வேளாங்கண்ணி புனித ஆரோக்கியமாதா ஆலய திருவிழா திண்டுக்கல்லில் இருந்து 60 சிறப்பு பஸ்கள் இயக்கம்



திண்டுக்கல், ஆக. 28

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா ஆலயத் திருவிழா வருடந்தோறும் சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான திருவிழா நாளை மறுநாள் (29ம் தேதி) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. செப்டம்பர் 9ஆம் தேதி வரை திருவிழா நடைபெறுகிறது. இந்த திருவிழாவிற்கு தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து ஏரா ளமானோர் பாதயாத்திரையாக சென்று வழிபாடு நடத்துவது வழக்கம். தி ண் டு க் க ல் மறை மாவட்டம் சின்னபொன்னிமாந்துரை புதுப்பட்டியில் இருந்து பாதயாத்திரையாக பக்தர்கள் இன்று சென்றனர். அல ங்கரிக்கப்பட்ட தேரில்மாதா சொரூபம் மலர்களால் அலங்கரி க்கப் பட்டு பக்தர்கள் இழுத்து சென்றனர்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை 50க்கும் மேற்பட்டோர் பாதையாத்திரை சென்றனர்.

புனித வேளாங்கண்ணி மாதாவை தரிசிக்க செல்லும் பக்தர்களின் வசதிக்காக தமிழ்நாடு போக்குவரத்து கழகம் மதுரை கோட்டம் சார்பில் சிறப்பு பஸ்கள் ஏற்பாடு செய்யப் ப ட் டு ள் ள து . திண்டுக்கலில் இருந்து வே ளா ங் க ண் ணி க் கு ம் , வே ளா ங் க ண் ணி யி ல் இருந்து திண்டுக்கலுக்கும் பக்தர்களி ன் தேவைக் கேற்ப,

இன்று முதல் செப்டம்பர் 9ஆம் தேதி வரை 60 சிறப்பு பஸ்கள் இரவு பகலாக இயக்க ப்படுகிறது. இதனை கண்கா ணிக்க திண்டுக்கல்லிலும் வேளாங்கண்ணியிலும் மேலாளரின் தலைமையில் 2 தனி குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மேலாண் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

# ஈரோட்டில் வெயில் தாக்கத்தால் வீட்டுக்குள்ளேயே முடங்கிய மக்கள்



ஈரோடு, ஆக. 28

ஈரோடு மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது.காலை8மணிக்கு தொடங்கும் வெயிலின் தாக்கம் மாலை 5 மணி வரை நீடித்து வருகிறது. குறிப்பாக காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலின் தாக்கம் உச்சத்தில் உள்ளது. மாவட்டத்தில் தொடர்ந்து 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகி வருவதால் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். அக்னி நட்சத்திரத்தை மிஞ்சும் வகையில் மாவட்டத்தில் கலந்து சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துவருகிறது. வீட்டுக்குள் கடும்புழுக்கம்நிலவுவதால் குழந்தைகள் முதியவர்கள் அவதி அடைந்து வருகின்றனர். 24 மணி நேரமும் மின்விசிறி இயங்கினாலும் வெப்ப காற்றால் சிரமம் அடைந்து வருகிறார்கள். இதைவிட வாகன ஓட்டைகளின் நிலைமை பரிதாபமாக உள்ளது. வெயிலுடன் அனல் காற்று வீசுவதால் வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். ஈரோடு மாநகராட்சி பகுதியில் தற்போது பல்வேறு இடங்களில் வளர்ச்சி திட்ட பணிகளுக்காக குழி தோண்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் இந்த பகுதிகளை கடந்து செல்ல கூடுதல் நேரம் ஆகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இந்த சமயம் வெயிலின் தாக்கம் அதிகரித்து இருப்பதால் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். வெயில் தாக்கத்திலிருந்து தப்பிக்கவும்,உடல்சூட்டை தணிக்கும் வகையிலும் இளநீர், கரும்பு பாலை அதிக அளவில் பருகி வருகின்றனர். இதனால் இந்த வியாபாரம் சூடுபிடிக்க தொ ட ங் கி யு ள் ள து . இதேப்போல் வெள்ளரிக்காய், தர்பூசணி பழ வியாபாரமும்சூடு பிடிக்கத்தொடங்கியுள்ளது. வெயில் தாக்கம் காரணமாக எப்போதும் பரபரப்பாக காணப்படும் பன்னீர்செல்வம் பார்க் ரோடு, மேட்டூர் ரோடு, காந்திஜி ரோடு, பெருந்துறைஈரோடு ஈஸ்வரன் கோவில் வீதி, கே.என்.கே.ரோடு போன்றவை மக்கள் நடமாட்டம் இன்றிவெறிச்சோடிகாணப்படுகிறது. கடைவீதிகளிலும் இன்று கூட்டம் சுமாராகவே இருந்தது. மக்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்கின்றனர்.

# 479 அரசுப் பள்ளியில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்



அரியலூர், ஆக. 28

அரியலூர் மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 479 அரசுப் பள்ளிகளில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அரியலூரை அடுத்த பொய்யாத நல்லூர் அரசு தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சட்டப் பேரவை உறுப்பினர் கு.சின்னப்பா, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவை பரிமாறி விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், அரியலூர் கல்வி மாவட்ட அலுவலர் ஜெயா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் தீபாசங்கரி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செந்துறை அடுத்த குழுமூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு, முதல்வரின் காலை உணவு திட்ட வி ரி வ ா க த் தி னை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு கலெக்டர் ஆனிமேரி ஸ்வர்ணா தலைமை வகித்தார். இதேபோல் ஜெயங்கொண்டம் ஒன்றியத்துக்கு உட்பட்ட துளாரங்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சட்டப் பேரவை உறுப்பினர் க.சொ.க.கண்ணன்,பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உணவுகளை வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட வழங்கல் அலுவலர் ஆர்.ராமலிங்கம், ஊரக வாழ்வாதார இயக்க திட்ட மாவட்ட மேலாளர் கே.கவிதா, வட்டாட்சியர் துரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில்குமார், முருகன், வட்டார கல்வி அலுவலர் ராஜாத்தியம்மாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதே போல் ஆண்டிமடம், தா.பழூர், திருமானூர் உள்ளிட்ட ஒன்றியத்துக்குள் உள்பட்ட அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டத்தினை அந்தந்தப் பகுதி உள்ளாட்சி பிரதிநிதிகள் தொடங்கி வைத்தனர். ஆக மாவட்டத்தில் 479 அரசுப் பள்ளிகளில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப் பட்டது.



# யுவன் தயாரிக்கும் புதிய படம் ஹீரோ யார் தெரியுமா?

பியார் பிரேமா காதல் திரைப்படத்தின் மூலம் யுவன் சங்கர் ராஜா தயாரிப்பாளர் ஆனார். இயக்குநர் எலன் உடன் யுவன் சங்கர் ராஜா புதிய படத்தில் மீண்டும் இணைகிறார்.

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளர்களில் யுவன் சங்கர் ராஜாவுக்கு எப்போதும் தனி இடம் உண்டு. பி.ஜி.எம். கிங் என்று ரசிகர்களால் போற்றப்படும் யுவன் சங்கர் ராஜா இசையை கடந்து திரையுலகில் பல்வேறு பணிகளில் மும்முரம் காட்டி வருகிறார். அந்த வகையில், யுவன் சங்கர் ராஜா யு.எஸ்.ஆர். ஃபிலிம்ஸ் என்ற பெயரில் படத்தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி படத்தயாரிப்பு பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவர் தயாரித்து வெளியான முதல் படம் பியார் பிரேமா காதல், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தை இயக்குநர் எலன் இயக்கி இருந்தார்.

இந்த நிலையில், பியார் பிரேமா காதல்' படத்திற்கு பிறகு மீண்டும் இயக்குநர் எலன் உடன் இணைகிறார் இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா. இந்த படத்தில் கவின் நடிக்க இருக்கிறார். டாடா படத்தைத் தொடர்ந்து கவின் நடிக்கும் இந்த படத்தின் தலைப்பு நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது.

# 90 வயதிலும் நடனமாடும் வைஜெயந்திமாலா வைரலாகும் வீடியோ



தமிழில் 1949ம் ஆண்டு ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த 'வாழ்க்கை' படத்தின் மூலம் சினிமாவுக்கு வந்தவர் வைஜெயந்தி மாலா. 'இரும்புத்திரை', 'பார்த்திபன் கனவு', 'தேன் நிலவு' 'பாக்தாத் திருடன்', 'சித்தூர் ராணி பத்மினி' போன்ற காலத்தால் அழியாத பல படங்களில் நடித்துள்ளார். 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் 'கண்ணும் கண்ணும் கலந்து...' என்ற பாடலுக்கு 'நாட்டிய பேரொளி' பத்மினியுடன் இணைந்து அவர் ஆடிய போட்டி பாடல், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது.

பல வெற்றிப்படங்களில் நடித்து பாலிவுட்டில் நம்பர் ஒன் நடிகையாக ஜொலித்தார். தெலுங்கு, வங்காள மொழி படங்களிலும் நடித்துள்ளார். சென்னையில் பிறந்து வளர்ந்த அவர், சினிமா தாண்டி அரசியலிலும் ஜொலித்தார். மக்களவை, மாநிலங்களவை என இரண்டிலும் எம்.பி.யாக பணியாற்றினார். பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கியே இருந்தார். 90 வயதாகும் வைஜெயந்திமாலா சமீபத்தில் பரதம் ஆடி வெளியிட்ட வீடியோ தற்போது வைரலாக பரவி வருகிறது. இந்த வயதிலும் அவரது நடன அசைவுகள் 'அடடா...' என்றே சொல்ல வைக்கிறது. இதனை திரை பிரபலங்களும், ரசிகர்களும் ஷேர் செய்தும், வாழ்த்துகள் தெரிவித்து பாராட்டியும் வருகிறார்கள்.

# குழந்தைகளுடன் முதல் ஓணம் பண்டிகையை கொண்டாடிய நயன் விக்கி



இரட்டைக் குழந்தைகளுடன் ஓணம் பண்டிகையை கொண்டாடும் க்யூட்டான புகைப்படங்களை விக்னேஷ் சிவன் தன் சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். நயன் விக்னேஷ் தம்பதி, தொடர்ந்து குழந்தைகளின் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் திருமணம் செய்து கொண்ட நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி, அக்டோபர் மாதம் வாடகைத் தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளுக்கு பெற்றோர் ஆனர். உயிர் ருத்ரோ நீல் உலக் தெய்வக் என தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிட்டுள்ள நயன் விக்னேஷ் தம்பதி, தொடர்ந்து குழந்தைகளின் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர். இந்நிலையில், இன்று தங்கள் இரட்டைக் குழந்தைகளுடன் ஓணம் பண்டிகையை கொண்டாடும் க்யூட்டான புகைப்படங்களை விக்னேஷ் சிவன் தன் சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். தற்போது இந்த புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



# பள்ளிக்குழந்தைகளுடன் சைக்கிளிங் செய்த நடிகர் அஜித்

பள்ளிக் குழந்தைகளுடன் அஜித் சைக்கிளிங் செய்தபோது எடுத்த புகைப்படங்களும், வீடியோக்களும் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகின்றன. அஜித்தோடு அவரது மனைவி ஷாலினி மற்றும் மகன் ஆத்விக் ஆகியோரும் சைக்கிளிங் செய்துள்ளனர். மேலும் படிக்க நடிகர் அஜித்தின் 'விடாமுயற்சி' திரைப்படத்திற்கான படப்பிடிப்பு எப்போது தொடங்கும் என்பதுதான் அவரது ரசிகர்களின் கேள்வியாக உள்ளது. இப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. மகிழ் திருமேனி இயக்க உள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைக்க உள்ளார். விடாமுயற்சி படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படாமல் தாமதம் ஆகி வந்ததால் இப்படத்தை படக்குழு கைவிட்டுள்ளதாக சமீபத்தில் தகவல் பரவி பரபரப்பைஏற்படுத்தியது. இதையடுத்துநிகழ்ச்சிஒன்றில்கலந்துகொண்ட இப்படத்தின் தயாரிப்பாளர், 'விடாமுயற்சி' கண்டிப்பாக உருவாகும் என உறுதியளித்தார். இந்நிலையில், நடிகர் அஜித், தனது மனைவி மற்றும் பள்ளிக் குழந்தைகளோடு ஜாலியாக சைக்கிளிங் சென்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. சென்னையில் பள்ளிக் குழந்தைகளுடன் அஜித் சைக்கிளிங் செய்தபோது எடுத்த புகைப்படங்களும், வீடியோக்களும் சமூக வலைத்தளத்தில் படு வைரலாகி வருகின்றன. அஜித்தோடு அவரது மனைவி ஷாலினி மற்றும் மகன் ஆத்விக் ஆகியோரும் சைக்கிளிங் செய்துள்ளனர்.

# நா ரெடி தான் வரவா? லியோ டிக்கெட் முன்பதிவு ஆறு வாரங்களுக்கு முன்பே தொடக்கம்..!



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன்ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதையடுத்து நடிகர்கள் சஞ்சய் தத் மற்றும் அர்ஜூன் கதாபாத்திரத்தின் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டது. இந்த நிலையில் லியோ படம் குறித்து புதிய அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி லியோ படத்திற்கு ஆறு வாரங்களுக்கு முன்பு, செப்டம்பர் 7ம் தேதியில் இருந்து லண்டனில் டிக்கெட் முன்பதிவு தொடங்க இருக்கிறது. இதனை பட வெளியீட்டு நிறுவனமான அகிம்சா என்டர்டெயின்மென்ட் தனது எக்ஸ் (முன்பு டுவிட்டர்) பதிவில் தெரிவித்து இருக்கிறது.


# ஆசிய விளையாட்டுப் போட்டி இந்திய மகளிர் கால்பந்து அணி அறிவிப்பு




ஆசிய விளையாட்டு போட்டிகள் அடுத்த மாதம் துவங்க உள்ளன. இந்திய மகளிர் கால்பந்து அணியில் மூன்று தமிழக விராங்கனைகள் இடம்பிடித்தனர்.

1951ம் ஆண்டு முதல் ஆசிய விளையாட்டு போட்டிகள் ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 19வது ஆசிய விளையாட்டு போட்டிகள் சீனாவில் உள்ள ஹாங்சோவ் நகரில் அடுத்த மாதம் (செப்டம்பர்) 23ம் தேதி துவங்கி அக்டோபர் 8ம் தேதி வரை நடைபெற இருக்கிறது. இதில் 48 விளையாட்டுகளில் இருந்து மொத்தம் 481 பந்தயங்கள் நடத்தப்பட உள்ளன. இந்த போட்டியில் பங்கேற்க மொத்தம் 850 வீரர், வீராங்கனைகள் அடங்கிய பட்டியலை இந்திய ஒலிம்பிக் சங்கம், மத்திய விளையாட்டு அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்து இருந்தது. இந்த பட்டியலில் இருந்து 38 விளையாட்டுகளை சேர்ந்த 634 வீரர், வீராங்கனைகள் கொண்ட இந்திய அணி ஆசிய போட்டியில் கலந்து கொள்ள மத்திய விளையாட்டு அமைச்சகம் சமீபத்தில் அனுமதி அளித்தது. இந்த நிலையில், ஆசிய போட்டிகளில் கலந்து கொள்ள இருக்கும் இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த முறை இந்திய மகளிர் கால்பந்து அணியில் தமிழகத்தை சேர்ந்த சௌமியா, இந்துமதி மற்றும் சந்தியா என மூன்று வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். ஆசிய விளையாட்டு போட்டிக்கான இந்திய மகளிர் கால்பந்து அணி வீராங்கனைகள்: ஸ்ரேயா ஹூடா, சௌமியா நாராயணசாமி, பந்தோய் சானு, அஷ்தலதா தேவி, ஸ்வீடி தேவி, ரிது ராணி, டால்மியா சிபீர், ஆஸ்டம் ஒரான், சஞ்சு, ரஞ்சனா சானு, சங்கீதா பாஸ்ஃபோர், பிரியண்கா தேவி, இந்துமதி கதிரேசன், அஞ்சு தமங், சௌமியா குகுலோத், தங்மேய் கிரேஸ், பியாரி சாசா, ஜோதி, ரேனு, பாலா தேவி, மனிஷா மற்றும் சந்தியா ரங்கநாதன்.

# உலக பேட்மிண்டன் போட்டி: அரை இறுதியில் பிரனாய் தோல்வி வெண்கலப்பதக்கம் பெற்றார்



உலக பேட்மிண்டனில் பிரனாய் பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். ஒட்டுமொத்தத்தில் இந்தியா பெற்ற 14வது பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

28வது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் டென்மார்க் தலைநகர் ஹோபன்ஹேகன் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 9வது இடத்தில் இருக்கும் இந்திய வீரர் எச்.எஸ். பிரனாய், 3ம் நிலை வீரரான குன்லாவுத் விதித்சரணை (தாய்லாந்து) எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல்செட்டை தன்வசப்படுத்தி பிரமாதமான தொடக்கம் கண்ட பிரனாய் அடுத்த 2 செட்களில் எதிராளிக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினார். 1 மணி 16 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் பிரனாய் 2118, 1321, 1421 என்ற செட் கணக்கில் குன்லாவுத் விதித்சரணிடம் வீழ்ந்த பிரனாய் வெண்கலப்பதக்கத்துடன் திருப்தி கண்டார். அவர் முந்தையநாளில்நடந்தகால்இறுதியில்நடப்புஒலிம்பிக்,உலகசாம்பியனானவிக்டர்ஆக்சல்சென்னுக்கு(டென்மார்க்) அதிர்ச்சி அளித்து இருந்தார். உலக பேட்மிண்டனில் பிரனாய் பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். இதன் மூலம் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பதக்கம் வென்ற 5வது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார். ஒட்டுமொத்தத்தில் இந்தியா பெற்ற 14வது பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் முன்னாள் ஒலிம்பிக் சாம்பியனான கரோலினா மரின் (ஸ்பெயின்) 2321, 2113 என்ற நேர்செட்டில் நடப்பு சாம்பியன் அகானே யமாகுச்சியை (ஜப்பான்) வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரைஇறுதியில் 'நம்பர் ஒன்' வீரர் அன் சே யங் (தென்கொரியா) 2119, 2115 என்ற நேர்செட்டில் 3ம் நிலை வீரரான சென் யு பெய்யை (சீனா) விரட்டியடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

# உலக கோப்பை கிரிக்கெட்: ஹைடன் தேர்வு செய்த அணியில் குல்தீப், சாஹலுக்கு இடமில்லை



ஆஸ்திரேலிய முன்னாள் தொடக்க வீரர் மேத்யூ ஹைடன் உலக கோப்பை போட்டிக்கான இந்திய அணியை தேர்வு செய்து உள்ளார். யசுவேந்திர சாஹல் ஏற்கனவே ஆசிய கோப்பை அணியில் இடம்பெறவில்லை.

புதுடெல்லி: உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அக்டோபர் 5ந்தேதி இந்தியாவில் தொடங்குகிறது. இந்தப் போட்டியில் கோப்பையை வெல்லும் அணி எது? அரைஇறுதிக்கு முன்னேறு வது யார்? என்று முன்னாள் வீரர்கள் பலர் கணிப்புகளை வெளியிட்டு வருகிறார்கள். உலக கோப்பை போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் இடம் பெறப்போவது யார் என்று அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலிய முன்னாள் தொடக்க வீரர் மேத்யூ ஹைடன் உலக கோப்பை போட்டிக்கான இந்திய அணியை தேர்வு செய்து உள்ளார். அவர் தேர்வு செய்த அணியில் குல்தீப் யாதவ், யசுவேந்திர சாஹலுக்கு இடமில்லை. மேத்யூ ஹைடன் தேர்வு செய்த உலக கோப்பை போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி வருமாறு: ரோகித்சர்மா (கேப்டன்), சுப்மன்கில், வீராட்கோலி, ஸ்ரேயாஸ் அய்யர், கே.எல்.ராகுல், சஞ்சு சாம்சன், சூர்யகுமார் யாதவ், ரவீந்திர ஜடேஜா, ஹார்திக் பாண்ட்யா, ஜஸ்பிரீத் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ், ஷர்துல் தாக்கூர், இஷான் கிஷன். யசுவேந்திர சாஹல் ஏற்கனவே ஆசிய கோப்பை அணியில் இடம்பெற வில்லை. இதேபோல இந்திய அணி முன்னாள் கேப்டன் கங்குலி தேர்வு செய்த அணியில் யசுவேந்திர சாஹல் இடம் பெறவில்லை. மேலும், திலக் வர்மாவுக்கு அவர் வாய்ப்பு கொடுக்கவில்லை.

# சாம்சன் திலக் வர்மாவுக்கு இடமில்லை: உலகக் கோப்பை தொடருக்காக கங்குலி தேர்வு செய்த இந்திய அணி



உலகக் கோப்பை 2023 தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை முன்னாள் வீரர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார். சஞ்சுசாம்சன், பிரசித் கிருஷ்ணா மற்றும் திலக் வர்மா ஆகிய மூவரையும் உலகக் கோப்பைக்கான அணியில் தேர்வு செய்யவில்லை.

உலகக் கோப்பை 2023 தொடர் அக்டோபர் மாதம் 5ந்தேதி துவங்கி நவம்பர் 19ந்தேதி வரை நடைபெறுகிறது. இந்தியாவில் உள்ள பத்து நகரங்களில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, வங்கதேசம், ஆப்கானி`தான், இலங்கை மற்றும் நெதர்லாந்து என பத்து அணிகள் பங்கேற்கின்றன. ஐ.சி.சி. நடத்தும் உலகக் கோப்பை தொடருக்காக ஒவ்வொரு அணியும் தீவிரமாக தயாராகி வருகிறது. இந்த நிலையில், உலகக் கோப்பை 2023 தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை முன்னாள் வீரர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார். சஞ்சு சாம்சன், பிரசித் கிருஷ்ணா மற்றும் திலக் வர்மா ஆகிய மூவரையும் உலகக் கோப்பைக்கான அணியில் தேர்வு செய்யவில்லை. அவர்களை ஆசிய கோப்பை 2023 இந்திய அணியில் தேர்வு செய்தார். இத்துடன் காயத்தால் அவதிப்பட்டு, அதில் இருந்து மீண்டு வரும் ஸ்ரேயாஸ் ஐயர், கே.எல். ராகுல் ஆகியோரும் ஆசிய கோப்பைக்கான இந்திய அணியில் இடம்பெற்றுள்ளனர். பேட்ஸ்மேன் பட்டியலில் ரோகித் சர்மா, சுப்மன் கில், விராட் கோலி, ஷ்ரேயாஸ் அய்யர், கேஎல் ராகுல், மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோர் உள்ளனர். கீப்பராக இஷான் கிஷன் தேர்வு செய்துள்ளார். ஆல்ரவுண்டரில் ஹார்திக் பாண்ட்யா, ஜடேஜா, அக்சர் படேல் ஆகியோரும் சுழற்பந்து வீச்சாளர்களில் குல்தீப் யாதவ் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். வேகப்பந்து வீச்சாளர்களில் பும்ரா, சமி, சிராஜ், தாகூர் இடம் பெற்றனர். இந்தியா தனது உலகக் கோப்பை தொடரின் முதல் ஆட்டத்தை ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அக்டோபர் 8ம் தேதி சென்னையில் விளையாடுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.